CC-O. In Public Domain. Digitized by eGangotri

கதை மலர்







1

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Published by
© The President
Sri Ramakrishna Math,
Mylapore, Madras 600 004.

ISBN 81-7120-091-5

All Rights Reserved
First Edition
5M 3C-6-1988

Printed in India at
Sri Ramakrishna Printing Press,
Mylapore, Madras 600 004.

1	சூர்தாசர்	1
2	கண்ணன் சாமர்த்தியம்	4
3	நாராயண மந்திரம்	7
4	கர்ணன் பெருமை	10
5	பிப்பலாதன் கேட்ட வரம்	13
6	சுவாமி விவேகானந்தர்	16
7	யாருக்கு பக்தி அதிகம்?	24
8	காலணி சுமந்த கண்ணன்	28
9	ராமசகாயமும் ராஜசகாயமும்	31

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திருவர் பகுதி

சூர்தாஸர்

கதை: பவதாரிணி

படம்: மணியம் செல்வன்

சூர்தாஸர் ஒரு கிருஷ்ண பக்தர். கண் பார்வையை இழந்தவர். அவர் ஒரு சமயம் புனிதப் பயணம் செய்து கொண்டிருந்தார்.



அப்போது அவர் தவறி ஒரு பாழுங்கிணற்றில் விழுந்துவிட்டார்.





ஒரு வாரம் கிணற்றிலேயே இருந்து அவர் பிரார்த்தித்தார். ஒரு வாரத்திற்குப் பிறகு இளைஞன் திரு வருளால் அவர் கிணற்றிலிருந்து வெளியேறினார்.

திடீரென்று கண்ணனும் ராதையும் பேசுவது அவர் காதில் விழுந்தது.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பகவானைத் தரிசிக்கக் கண்பார்வை இல்லையே என்று சூர்தாஸ் வருந்தினார். அவரது வருத்தம் கண்ணனுக்குப் புரிந்தது.



ராதை சூர்தாஸரின் அருகில் சென்றாள்.



ராதை அவருடைய பின்புறமாகச் சென்று மெல்லத் தன் பாதங்களால் அவரைத் தீண்டினாள். இதைக் கண்ணன் சூர்தாஸருக்கு உணர்த்த விரும்பினான்.



சூர்தாஸ் உடனே பின்புறம் திரும்பி அவள் பாதங்களைப் பிடித்தார். ஆனால் ராதை தப்பி விட்டாள். எனினும் ராதையின் கால்சலங்கை சூர்தாஸரின் கைகளில் சிக்கிக் கொண்டது.



சலங்கையை என்னிடம் கொடுங்கள். நான் சிகாரியர்களுடன் நடனமாட வேண்டும்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri



மதுகணம் சூர்தாஸருக்குக் கண்பார்வை கிடைத்தும், தன் எதிரே கிருஷ்ணனும் ராதையும் நிற்பதைக் கண்டு அவர் மகிழ்ந்தார்.







அவரது பக்தியைக் கண்டு ராதையின் கண்ணில் நீர் துளும்பியது. சூர்தாஸ் மீண்டும் குருடரானார்.

கண்ணன் சாமர்த்தியம்

கதை : நிர்மால்யன்
படம் : சங்கர்...

மகாபாரதப் போரில் பதினோராவது நாள் மாலை நேரம்...







Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

கர்ணனிடம் பட்ட விடுப்புண்கள் ஏற்படுத்திய வேதனை கர்மரையே சிலிப்புறச் செய்தது.

எதற்கு? இருக்கிறேனே போய்விட்டேனே என்று பார்க்கவா வந்தாய்? கர்ணனை நானே வென்று காட்டுகிறேன் என்று காலமெல்லாம் வீரூப்புப் பேசினையே! இப்போது அவனோடு போர் செய்வதை விட்டுவிட்டு இங்கே பாசறையிலே உனக்கு என்ன வேலை? கர்ணனைக் கொல்லாத நீ ஏன் இந்தக் காண்டீபத்தைக் கையில் வைத்திருக்கிறாய்?

அர்ஜுனன் உடைவாளை உருவி ஓங்கியதைக் கண்டு பதறிப் போய்க் கண்ணன் குறுக்கிட்டான்.

கனஞ்ஜயா, இது என்ன விபரீதம்! தந்தையினும் சாலச் சிறந்த தமையனையா மாய்க்கத் துணிந்தாய்!

மாதவா, பரந்தாமா! என் தமையனரைக் தெய்வமாய் மதிப்பவன்தான் நான். ஆனால் என் காண்டீபத்தைப் பழிப்பவரைக் கொல்வதாக நான் சபதம் செய்திருக்கிறேனே! இது உங்களுக்கும் தெரிந்ததுதானே! தமையனரைவிடச் சத்தியம் பெரிதாயிற்றே! என் வில்லைப் பழித்த அண்ணனைக் கொல்லாமல் விட்டால் சத்தியம் தவறிய பாவத்துக்கு ஆளாவேனே! இப்போது நான் என்ன செய்வேன்?

அர்ஜுன, உன் காண்டீபத்தைப் பழித்த கர்ணனை நீ கொல்ல வேண்டும்? வணக்கத்திற்கு உரிய பெரியவர்களை மரியாதைக் குறைவாக 'நீ', 'வா', 'போ' என்று ஒருமையில் அழைத்தால், அதுவே அவர்களைக் கொன்றதற்குச் சமமாகிவிடும். எனவே இப்போது கர்மரை 'நீ', 'வா', 'போ' என்று ஒருமையில் ஏகாவது சொல்லிவிடு. அதனால் அவர் படும் வேதனை அவரை நீ கொன்றதற்குச் சமானம் ஆகும். உன் சபதமும் முடிந்ததாகும்.

பரந்தாமனின் வார்த்தையை அர்ஜுனன் அப்படியே ஏற்றுக்கொண்டு யுதிஷ்டிரரைச் சொற்களால் சுட்டான்.

அண்ணா! நீ எந்தப் போருக்குப் போயிருக்கிறாய்? உனக்கு என்ன ஆற்றல் இருக்கிறது?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கர்மபுத்திரரை ஒருமையில் அழைத்த அடுத்த கணமே கனஞ்ஜயன் கன்னைக் கானே மாய்த்துக் கொள்ள முற்பட்டான். கண்ணன் தடுத்து—

அர்ஜுன! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? தற்கொலை செய்து-கொள்வது பெரும்பாவமல்லவா?

என் தமையனார் தர்மத்தின் சொரூபம். தந்தை-யினும் மேலானவர். அவரையே 'நீ' என்று நான் சொன்னதைவிடத் தற்கொலை பெரும் பாவமாகுமா? அவரை மரியாதைக் குறைவாகப் பேசிய நான், இனி உயிர் வாழவே கூடாது. பெருமானே, கையை விடுங்கள்.

சற்று நிதானி. நான் சொல்வதைக் கேள். உன் தமையனைப்பற்றிச் சொன்னது உனக்கு மட்டும் பொருந்தாதா? தன்னைத் தானே புகழ்ந்துகொள்கிறவன் எவனோ, அவன் தன்னை அழித்துக்-கொள்கிறான். ஆம், தற்புகழ்ச்சி தற்கொலைக்குச் சமமாகும். எங்கே, உன்னை நீயே சிறிது புகழ்ந்துகொள். அதுவே நீ தற்கொலை செய்து-கொண்டதாகிவிடும்.

அர்ஜுனன் தன்னைப் புகழ்ந்து-கொண்டான்.

நான் பெரும் வீரன். உலகம் முழுவதையும் வெற்றி கண்ட அர்ஜுனன். பாசுபதாஸ்திரம் பெற்றவன். தேவராஜ்ய பட்டாபிஷேகம் பெற்றவன்!

அடுத்த கணம் கனஞ்ஜயன், தன் தமையனின் பாதங்-களில் விழுந்து அவர் திருவடிகளைக் கண்ணீரால் கழுவினான்.

யுதிஷ்டிரா, விஜயனின் வெற்றிக்கு ஆசி கூறி அவனைப் போர்க்களத்துக்கு அனுப்பி வை.

மாதவா, திரிவிக்கிரமா, பரந்தாமா, கேசவா! திசை மாறிப் போக இருந்த குருக்ஷேத்திர யுத்தத்தை வெற்றி முகத்துக்குத் திருப்பி-விட்ட வித்தகன் நீ அல்லவா? எனக்குள்ளிருந்து நீ கூறும் ஆசியை நான் கூறுகிறேன்.

விஜயா! வெற்றி வீரனாய்த் திரும்பு.

அர்ஜுனனின் அம்பால் கர்ணன் வீழ, கணனன் அவனிடம் இறுதிக் கொடையாசிக்குப் பரகதி அளித்த கதை பலர் அறிந்த கதை.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நாராயண மந்திரம்

கதை: நிர்மால்யன் படம்: சங்கர்...

சதா நாராயண மந்திரத்தை உச்சரிக்கும் நாரதரே நாராயணனிடம் இப்படியொரு கேள்வி கேட்டார்:

நாராயணா! உங்கள் திருநாமத்தின் மகிமைதான் என்ன? உலகறியச் சொல்ல வேண்டும்.

அப்படியா! பூலோகத்தில் ஏதாவதொரு புலிய ஜீவனிடம் என் நாமத்தைச் சொல்லிப் பாரேன்.

பூவுலகம் இறங்கி வந்த நாரதர், சேற்றிலே நெளிந்துகொண்டிருந்த ஒரு புழுவை நெருங்கி, 'நாராயண! நாராயண!' என்று இருமுறை சொல்ல-

எம்பெருமானே! இதென்ன கொடுமை? உன் திருநாமத்தை நான் சொன்ன மாத்திரத்தில் இந்தப் புழு மரணம் அடைந்துவிட்டதே!

பகவானிடம் சென்று முறையிட்டார் நாரதர்.

அப்படியா! அதோ பார், ஒரு பட்டாம்பூச்சி மலர்மீது அமர்கிறது. அதனிடம் என் திருநாமத்தைச் சொல்வாயாக!

நாராயண! நாராயண!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மறுகணம் சிறகடித்துப் பறந்த அந்தப் பட்டாம்பூச்சியும் சுருண்டு விழுந்துவிட்டது.

ஓ, பட்டாம்பூச்சியும் மாய்ந்ததோ? சந்சலம் வேண்டாம். அதோ அந்த மான் குட்டியின் செவியில் எமது நாமத்தைச் சென்று ஓதுவாயாக!

நாராயணா! நாராயணா!

அடுத்த கணம் அந்தக் குட்டிமான் கள்ளியெழுந்த வேகத்திலேயே பொட்டென்று வீழ்ந்து மாய்ந்தது.

பகவானே! புழு இறந்தது. பூச்சியும் இறந்தது! மானும் மடிந்தது. இதென்ன அபசாரம் மாதவா?

அதற்குள் மனம் கலங்கினால் எப்படி? அதோ ஒரு கன்றுக்குட்டி தெரிகிறதல்லவா? அதனிடம் சென்று என் நாமத்தை உச்சரிப்பாயாக!

இறைவா! இதற்கு மேலும் என்னைச் சோதிக்காதீர்கள். இதுதான் நான் கடைசியாகச் சொல்லப்போவது.

நாராயணா! நாராயணா!

ம்மா.....

Sri Vijayabharathi Book Centre, Bangalore
CC-O. In Public Domain. Digitized by eGangotri

அந்தக் கன்றும் அடுத்த விநாடி உயிர் தரிக்கவில்லை.

பகவானே! காக்கும் கர்த்தாவாகிய தேவரீருடைய திருநாமம் இப்படிச் சம்ஹாரத்தில் முடிவது என்ன சோதனை சுவாமி?

பிரம்மபுத்திரா! அதற்குள் அவசரப்படுகிறாயே! காசிராஜன் அரண்மனையில் இப்போது கோலாகலக் கொண்டாட்டம் நடக்கிறது. மன்னனுக்கு ஓர் ஆண்மகவு பிறந்திருக்கிறது. நீ அந்தச் சிசுவிடம்....

சுவாமி! எனக்குக் கலகப் பிரியன் என்றுதான் பெயர். என்னைக் கொலைகாரன் என்ற பட்டத்துடன் உலவவிடத் திருவுளமோ?

நாரதா! இந்த ஒரு கடவை மட்டும் அந்தக் குழந்தையின் செவியில் எமது நாமத்தைச் சொல்லி வருவாயாக!

காசிராஜன் அரண்மனையில் நாரதருக்குக் கோலாகல வரவேற்பு.

சுவாமி! என் குமாரன் பிறந்த நாளில் தாங்கள் இங்கு எழுந்தருளியது எங்கள் தவப்பயன். என் மைந்தன் பேரும் புகழும் பெற்றுச் சிறந்து விளங்க ஆசி கூற வேண்டும்.

நாராயண! நாராயண!

இதென்ன விந்தை! நாராயணன் நாமம் செவிமடுக்க அடுத்த நொடியில் பிறந்த குழந்தை எழுந்து அமர்ந்து வாய் மலர்ந்தது :

மகரிஷி! தங்களுக்குக் கோடானுகோடி நமஸ்காரங்கள். நாமத்தின் மகிமை உங்களுக்கு இன்னுமா புரியவில்லை?

புரியவில்லை குழந்தாய்! விளக்கமாகச் சொல்.

ஆரம்பத்தில் நான் புழுவாய் இருந்தேன். அப்போது உங்களிடம் செவிமடுத்த நாராயண மந்திரம் என்னைப் பட்டாம்பூச்சியாக்கியது. அதேபோல் மானுகி, பனுங்கன்முகியதும் அதே நாராயண நாமத்தால்தான். இறுதியாக நான் கிடைத்தற்கரிய மானுடப் பிறவி அடைந்ததும் நாராயணன் என்னும் நாம மகிமையால்தான்!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிறுவர் பகுதி

கர்ணன் பெருமை

கதை: ஆர்வி
படம்: சங்கர்...

ஹஸ்தினபுரத்தில் அர்ஜுனனும் கிருஷ்ணனும் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தபோது.....



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அர்ஜுனா! இன்று அஸ்தமனத்துக்குள் இந்த மலைகளை உன்னால் தானம் செய்ய முடியுமானால் நிச்சயம் நீ கர்ணனுக்குச் சமமானவன்தான்!

தானம் செய்து காட்டுகிறேன், பார்!

அதன் பிறகு அர்ஜுனன் அந்த மலைகளைக் கோடாலி கொண்டு பிளந்து, வந்தவருக்கெல்லாம் பாளம் பாளமாகத் தானம் வழங்கினான்.

மாலை நேரம் வரையில் வெட்டிக் கொடுத்தும் மலைகள் கால் பாகம் கூடக் கரையவில்லை. ஆகவே வேகம் வேகமாக வெட்டினான்.

வாருங்கள்! மறுபடியும் வந்து வாங்கிக் கொள்ளுங்கள்!

அப்படியும் மலைகள் பாதிகூடக் கரையாதது கண்டு அர்ஜுனன் மலைத்துத் திகைத்தான். தள்ளாடினான். கடைசியில் களைத்துப் போய்க் கதறினான்.

ஹே, கிருஷ்ணா! கிருஷ்ணா!

கிருஷ்ணன் வந்து பார்க்கிறான்.

அர்ஜுனா! பொழுது சாயப் போகிறதே! இன்னும் தானம் கொடுத்து முடியவில்லையா? கர்ணனை இருந்தால் இந்நேரம் காரியமே முடிந்திருக்குமே!

கிழித்தான் அவன்! சும்மாவாவது அவனைப் புகழாதே. நான் கொடுத்த அளவு கூட அவனால் வெட்டிக் கொடுத்திருக்க முடியாது!

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அப்படியா சொல்கிறாய்? உம்... யாரப்பா அது? போய், கையோடு கர்ணனை இங்கே அழைத்து வா!

உத்காவு! இதோ!

கர்ணன் வந்து கண்ணபிரானை வணங்கி நின்றதும்.....

கர்ணா! அஸ்தமிப்பதற்குள் இந்த மலைகளை நீ தானம் செய்து விட வேண்டும்!

அதற்கென்ன, அப்படியே செய்து விடுகிறேன்!

அப்போது வழியோடு சென்ற இரு வழிப்போக்கர்களைக் கூப்பிட்டான் கர்ணன். அவர்கள் வந்ததும்.....

இதோ, இரண்டு மலைகள்! அனைத்தையும் ஒன்றாகத் தானம் செய்கிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்.

கர்ணப் பிரபு என்றால் கர்ணப் பிரபுதான்!

கண்ணா! ஒரே நொடியில் காரியம் முடிந்து விட்டது. சரிதானே?

அர்ஜுனா, பொறுமைப்பட்டாயே! புகழ் சும்மா வந்து விடுமா? எதற்கும் சுலபமான வழி ஒன்று உண்டு. அந்த வழி செய்து பழகியவர்களுக்கே கை வரும். தெரிந்து கொள்!

கண்ணா! கண்டு கொண்டேன்! உன் பாதங்களே சரணம்!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பிப்பலாதன் கேட்ட வரம்

கதை: மாது
படம்: சித்ரலேகா



ததீசி முனிவரின் ஆசிரமத்தில் ஒரு நாள்.....

மகனே பிப்பலாதா, எங்கே புறப்பட்டாய்?

தாயே, இந்திரனைப் பழிவாங்கப் போகிறேன். என் தந்தையான ததீசியை இந்திரன் கொன்று-விட்டான் அல்லவா? ஆதலால் தேவர் குலத்தையே அழித்து ஒழிக்க நான் தவம் செய்யப் போகிறேன்.

தெரியாமல் பேசாதே. கொடிய அரக்கனை விருத்திராசுரனைக் கொல்ல இந்திரனுடைய எந்த ஆயுதத்தாலும் இயலவில்லை. உன் தந்தையார் தமது முதுகெலும்பை இந்திரனுக்-குத் தானமாக மனமுவந்து கொடுத்தார். அதைக்கொண்டு வஜ்ராயுதம் செய்து அரக்கனை ஒழித்தான் இந்திரன். அந்தப் போர் நடந்தபோது நீ சிறுவன்.

இப்போது நான் பெரிய-வனாகி விட்டேன். இந்திரனும் தேவர்களும் என் தந்தையை ஒழிக்கவே அவரிடம் முதுகெலும்பைக் கேட்டிருக்கிறார்கள். இந்தச் சதியைச் செய்த தேவர்களை எப்படியும் நான் பழிவாங்கியே தீருவேன்.

முரட்டுத் தவசி பிப்பலாதன் காட்டுக்குச் சென்று கடும் தவம் இயற்றினான்.

பிப்பலாதா, உன் தவத்தை மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டும்?

பிரபு! தங்கள் நெற்றிக் கண்ணைத் திறந்து தேவர்கள் அனைவரையும் பொசுக்கித் தள்ள வேண்டும்.

Sri Vidyabharathi Book Centre, Shringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



Sri Vidyabharathi Book Centre, Srinagar

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Shingeri

சுவாமி விவேகானந்தர்

கதை : சுவாமி கமலாத்மானந்தர் படம் : சங்கர்...



கல்கத்தாவில் பிரபலமான வழக்கறிஞர் விசுவநாத தத்தர். அவர் மனைவி புவனேசுவரி தேவி ஒரு சிவபக்தை. 1863-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் தேதி பொங்கல் திருநாளில் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.



சூரியனுக்கு உகந்த நாளில் பிறந்த அந்தக் குழந்தையே பிற்காலத்தில் ஞான சூரியனாகத் திகழ்ந்து, உறங்கிக் கிடந்த பாரதத்தைத் தட்டி எழுப்பிய விவேகானந்தர் ஆவார்.

குழந்தைக்கு நரேந்திரன் என்று பெயர். நரேன் என்று கூப்பிடுவோம்!

தேவர்களுக்குத் தேவேந்திரன் போல மனிதர்களுக்கு இவன் நரேந்திரனாக விளங்கட்டும்!

சிறு வயதில் நரேந்திரன் தாயின் மடியில் அமர்ந்து ராமாயண, மகாபாரதக் கதைகளை ஆவலோடு கேட்பான். புராணக்கதைகளையும் மகான்களின் வரலாறுகளையும் உன்னிப்பாகக் கேட்பான்

நரேந்திரன் எப்போதும் குறுகுறுவென்று இருந்தான். படிப்பிலும் விளையாட்டிலும் படுசுட்டி. அதே சமயம் அடிக்கடி தியானப் பயிற்சியில் ஈடுபடுவதையும் அவன் விரும்பினான். ஒரு நாள் தியானம் பயிலும்போது...

CC-O. In Public Domain. Digitized by eGangotri
Sivakumaran Bharathi Book Centre, Srirangam

நரேந்திரனுடைய அறிவும் வளர்ந்து வந்தது. கல்லூரி நாட்களில் தத்துவ ஞானிகளின் கருத்துக்களை ஆழ்ந்து படித்தான். மனிக்கணக்கில் சிந்தித்தான்.

இளைஞன் நரேந்திரன் உள்ளத்தில் ஒரு கேள்வி தோன்றி விசுவரூபம் எடுத்தது.



ஒருவர்கூட இறைவனைக் கண்டதாகப் பதில் சொல்லாதபோது, ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றிக் கேள்விப்பட்டு ஒரு நாள் அவரைத் தேடிச் சென்றான். பார்த்ததுமே.....

ராமகிருஷ்ண பரமஹம்சர் புன்னகையோடு...





பரமஹம்சரின் பதில் நரேந்திரனுக்கு வியப்பைத் தந்தது. பல முறை அவரைத் தரிசிக்க வந்தான். ஒரு நாள் பரமஹம்சர் வழிபடும் காளிகோயிலுக்குள் அவன் முன்று முறை சென்றான். பரமஹம்சரின் திருவருளால் காளிதேவியை நேருக்கு நேர் தரிசித்தான்.



CC-O. In Public Domain. Digitized by eGangotri

மற்றொரு நாள் ராமகிருஷ்ணர் நரேந்திரனைத் தொட்டதும்.....

பரமஹம்சர் கிருபையால் சீடரான நரேந்திரருக்கு இன்னும் பலவிதமான ஆன்மிக அனுபவங்கள் ஏற்பட்டன. ஸ்ரீராமகிருஷ்ணர் நோய்வாய்ப்பட்ட போது அனைத்துச் சீடர்களும் அருகில் இருந்து கொண்டு செய்தனர். தமது மறைவுக்குச் சற்று முன்பு நரேந்திரர் உட்பட பன்னிரண்டு சீடர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் காவியுடை தந்து சந்நியாசம் வழங்கினர்.



பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் 16.8.1886-இல் மகாசமாதி அடைந்தார். துறவியாகிவிட்ட நரேந்திரர் விவேகானந்தர் என்று பெயர் பெற்றார். பரமஹம்சரின் சீடர்கள் சேர்ந்து பாராநகர் என்ற இடத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மடம். ஒன்றை நிறுவினர்கள். சீடர் குழுவினரை சுவாமி விவேகானந்தர் முன்னின்று வழி நடத்தினர்.

கையில் பணம் இல்லாமல் தெய்வத்தின் கிணையை மட்டுமே நம்பி, அவர் இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்றார்.



ஏழை எளியவர்களின் குடிசைகளில் பெரும்பாலும் தங்கினர்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

பிக்ஷை ஏற்று உண்டார்.



வடக்கே காசி முதல் பல இடங்களுக்கும் சென்ற விவேகானந்தர் தெற்கே குமரிமுனைக்கும் வந்தார். கடலில் இருந்த பாறையில் அமர்ந்து மூன்று நாள் தவம் இருந்தார். அந்த நிலையில் அவருக்கு இந்தியாவின் உண்மை வடிவம் புரிந்தது.



சில சமயங்களில் அரண்மனைகளில் தங்கி, ராஜோபசாரத்தையும் ஏற்றார்.



தியான நிலையில்...



CC-O. In Public Domain. Digitized by eGangotri
Sri Vidyabharathi Book Centre, Sringeri

கன்னியாகுமரியிலிருந்து சென்னை வந்த சுவாமிஜி செயலாற்றல் மிக்க சீடர்களை உருவாக்கினார். ஒரு நாள்.....



சென்னைச் சீடர்கள் அந்தப் பயணத்துக்காக வீடுவீடாகச் சென்று நிதி சேகரித்தார்கள்.

1893 மே 31-ஆம் தேதி பம்பாயிலிருந்து கப்பல் புறப்பட்டது.



சிகாகோ நகரில் 1893 செப்டம்பர் 11-ஆம் தேதியில் சர்வ சமயப் பேரவை தொடங்கியது. அனைத்து மதப் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் மதத்தின் மேன்மையை விவரித்தார்கள்.



Sri Vijayabhaktha Book Centre, Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

முப்பது வயதான விவேகானந்தருக்கு அன்று ஒரு சில நிமிடங்களே அளிக்கப்பட்டது. விவேகானந்தரின் தெய்வீகக் குரல் கணீரென்று ஒலித்தது.

அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே, சகோதரர்களே! உலக மதங்களுக்கெல்லாம் தாய் மதமான இந்து மதத்தின் பெயரால், இந்திய மகரிஷிகளின் பெயரால் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன்.....

நேரம் போனதே தெரியாமல் பேரவை அவர் பேச்சில் மயங்கியது. முடிவில் நீண்ட நேரம் கரகோஷம் செய்து பாராட்டியது.

மறு நாள் அமெரிக்கப் பத்திரிகைகளில் எல்லாம் சுவாமிஜியின் புகழாரமே படத்துடன் நிறைந்திருந்தன. உலகம் முழுவதும் இந்தச் செய்தி பரவியது. இந்து மதத்தின் புகழ் எட்டியது.

அவர் பேசுத்தான் தஜ்ஜி சிறந்து விளங்கியதாம்!

முப்பதே வயதான இந்து சுவாமிஜியாம்!

யார் இந்த சுவாமிஜி!

ஆகா! என்ன அருமையான பேச்சு! என்ன கம்பீரம்! என்ன தெளிவு!

அமெரிக்காவின் பொது இடங்களிலும் வீடுகளிலும் விவேகானந்தரின் படங்கள் வைக்கப்பட்டன. நகர்களில் எல்லாம் ஒரே பரபரப்பு.

VIVEKANANDA

அமெரிக்கா, இங்கிலாந்து நகரங்களிலிருந்தெல்லாம் பேச வருமாறு அவரை அழைத்தார்கள். சுவாமிஜி மின்னல் வேகத்தில் சென்று சஜீக்காமல் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அங்கங்கே சீடர்கள் சேர்ந்தார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ள சீடர்களைக் கொண்டு வேதாந்தச் சங்கங்களை ஏற்படுத்தினார்.



1897-ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து கப்பலில் புறப்பட்ட விவேகானந்தர் பாம்பன் குறுமுகத்தில் வந்திறங்கியபோது ராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி கோலாகலமாக வரவேற்றார்.

சென்னை வரும் வழியில் பாம்பன், ராமேசுவரம், பரமக்குடி, மானாமதுரை, மதுரை, கும்பகோணம் ஆகிய இடங்களில் எல்லாம் அவரைக் காண மக்கள் வெள்ளம் கூடியது. சுவாமிஜி வீரம்நிறைந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.



சென்னையில் வரலாறு காணாத வகையில் வரவேற்பு.



CC-O. In Public Domain. Digitized by eGangotri
Sri Vidyabharathi Book Centre, Singeri

சென்னையில் ஆறு அரிய சொற்பொழிவுகள். தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு விவேகானந்தர் கூறினார்.

அறிவாற்றல் பொருந்திய தாய்மை மிக்க ஒரு நூறு இளைஞர்கள் முன்வாருங்கள் இந்த உலகையே மாற்றி அமைக்கலாம். இந்தியாவையும் உலகம் முழுவதையும் நாம் விழிக்கெழச் செய்ய வேண்டும்!

கல்கத்தா திரும்பிய பின்னர்..... கங்கைக் கரையில் பேலூர் என்ற ஊரில் ராமகிருஷ்ண மிஷன் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

ஆன்மிகம், கல்வி, மருத்துவம், இயற்கைச்சீற்ற நிவாரணம் போன்ற துறைகளில் நமது பணி அமைய வேண்டும்!

ராமகிருஷ்ண மடங்கள் உலகின் பல பாகங்களிலும் இயங்கி வருகின்றன. சமயத் தொண்டும் சமுதாயத் தொண்டும் புரிந்து வருகிறது. அதற்கெல்லாம் மூல புருஷரான சுவாமி விவேகானந்தர் 39-ஆம் வயதில் 1902 ஜூலை 4-ஆம் நாள் தம் பணிகளை இந்திய இளைஞர்களிடம் ஒப்படைத்துவிட்டு மறைந்தார்.

அவர் விடுத்த செய்தி:

மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம்தான் நாம் இறைவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும். பெரிய லட்சியத்துக்காக இந்திய இளைஞர்களே! உங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்ய முன் வாருங்கள்!

சுவாமி விவேகானந்தரின் குரல் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்திய இளைஞர்கள் செவி சாய்ப்பார்களா?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யாருக்குப் பக்தி அதிகம்?

கதை : குருதாஸ்

படம் : சங்கர்...

பஞ்ச பாண்டவர்கள் காட்டில் வசித்தபோது தினமும் அதிகாலையில் எழுந்துவிடுவார்கள். ஆனால் பீமன் மட்டும் தாமதமாகவே படுக்கையிலிருந்து எழுந்து வருவான்.



அர்ஜுனனுக்கு அகங்காரம் அதிகம்.

ஒரு நாள், எல்லோரும் உணவு அருந்திக் கொண்டிருந்தபோது....



கிருஷ்ணனை அழைக்க நகுலன் சென்றான். ஆனால் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தான்.

CC-0. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

அர்ஜுனன் கற்பெருமையுடன் எழுந்தான்.

ஆனால் அவனுக்கும் அதே பதில்தான் கிடைத்தது.



மனமிடிந்தவனாக அர்ஜுனன் திரும்பினான்.

மறுநாள் பீமன் வழக்கப்படி மெதுவாய் எழுந்து வந்தான்.

CC-0. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri



CC-0. In Public Domain. Digitized by eGangotri

Sri Krishnabharathi Book Reading Project

பீமன் தன் கதையை வானத்தை நோக்கி வீசி எறிந்தான். உரக்கக் கூவினான்.

கிருஷ்ணா! நீ இப்போது இங்கே வரப்போகிறாயா, இல்லையா? வராவிட்டால் இந்தக் கதை என் தலைமீது விழட்டும்! என் உயிர் போகட்டும்!

மறு நிமிஷமே மாயக் கண்ணன் அங்கே தோன்றினான். பக்தர்கள் கூப்பிட்ட குரலை வருகிறவனையிற்றே இறைவன்!

பீமனின் தலைக்கு மேல் விழுந்து கொண்டிருந்த கதையைச் சட்டென்று கண்ணன் பிடித்தான்.

பீமனைக் கட்டித் தழுவிக் கொண்டான் கண்ணன்.

கிருஷ்ணா! வாருங்கள்! வாருங்கள்!

அர்ஜுனன் தலைகுனிந்தான். அவன் அகங்காரம் அகன்றது.

பீமனின் பக்திக்குக் கட்டுப்பட்டே கண்ணன் வந்திருக்கிறான். எனவே பீமன்தான் உண்மையான பக்தன். தன்னுடைய பக்தியை அவன் தம்பட்டம் அடித்துக்கொள்வதில்லை. அப்படிப்பட்ட அடக்கமான பக்திதான் இறைவனுக்குப் பிடிக்கும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-0. In Public Domain. Digitized by eGangotri

காலனி சுமந்த கண்ணன்

கதை : ஸ்ரீதர் படம் : சங்கர்...

மகாபாரதப் போரின் ஒன்பதாம் நாள் இரவு. பீஷ்மாசாரியார் பாசறைக்குத் துரியோதனன் வந்தான். தாத்தாவான பீஷ்மர் முழு வேகத்தோடு போர் செய்து, பாண்டவர்களை மாய்க்கவில்லை என்று அவரிடமே முறையிட்டான்.



வெல்கிறேன் என்று சொல்லாதீர்கள், தாத்தா! அவர்களைக் கொல்கிறேன் என்று சொல்லுங்கள்.

நன்றிக் கடனுக்காகத் துரியோதனன் பக்கம் இருந்தாலும் கர்மம் வெல்லும் என்று ஆசி கூறிய தாத்தா இப்போது பாண்டவர்களை அறிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறாரே இதற்கு என்ன செய்வது? என் சபதம் என்ன ஆவது? கண்ணனைதான காப்பாற்ற வேண்டும்! கண்ணா!

இந்தச் செய்தி அன்றிரவே பாண்டவர்களுக்கு எட்டியது. பீஷ்ம பிதாமகரை வெல்ல யாரால் முடியும் என்று பாண்டவர்கள் கலக்கம் அடைந்தார்கள். திரௌபதி அப்படியே இடிந்து போனாள்.

திரௌபதி கண்ணனை நினைத்த மறுகணமே அந்த மாயக் கண்ணன் அவள் முன் தோன்றினான்.

Sri Vidyabhaskar Book Centre, Srirangam
CC-O. In Public Domain. Digitized by eGangotri

அடர்ந்த இருளில் அவர்கள் போர்க்களத்தின் ஓரமாக நடந்தார்கள். போர்க்களம் ரணகளமாக இருந்தது. சிதறிக் கிடந்த சடலங்களிடையே மரண ஓலம் பயங்கரமாகக் கேட்டது. ஒரு பாசறையை நெருங்கியதும்.....

கங்காய்! உன் காலணிச் சத்தம் பெரிதாகக் கேட்கிறது. அதைக் கழற்றிப் போடு.

சரி அண்ணா!

பாசறை வாசலில்.....

உஸ்! உள்ளே ஒரு பெரியவர் உலாவுகிறார். நீ எதுவுமே பேசாமல் அவர் காலடியில் விழுந்து வணங்கு!

இது என்ன பிரமாதம். அப்படியே செய்கிறேன்.

பீஷ்மாசாரியார் வருபவள் யாரென்று கவனிப்பதற்குள் பாஞ்சாலி அவரை விழுந்து வணங்கினாள். பீஷ்மர் அப்படி வணங்கியவளை உடனேயே வாழ்த்தினார்

தீர்க்க சுமங்கலியாக இருப்பாயாக! யாரம்மா நீ? எழுந்திரு! என்ன வேண்டும் உனக்கு?

எனக்கு மாங்கல்யப் பிச்சை வேண்டும்!

தீப்பந்த வெளிச்சத்தில் வணங்கி எழுந்தவளின் முகத்தைப் பார்த்ததும், பீஷ்மர் திடுக்கிட்டார்.

ஆமாம், தாத்தா!

ஆ! திரௌபதி! நீயா?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri


ஏங்கே வந்தாய் இந்தக் கொடிய இருளில்? தனியாகவா வந்தாய்?
உங்கள் ஆசீர்வாதத்துக்குத்தான் வந்தேன். அது உடனேயே கிடைத்து விட்டது. அதோ வாசலில் அண்ணு! அவர் துணையோடுதான் வந்தேன்.
பீஷ்மர் வாயிலில் நிற்கும் கண்ணனைப் பார்த்துவிட்டு—
வா, கண்ணு, இப்படி உள்ளே வா! நான் நினைத்தேன், இது உன் வேலையாகத் தான் இருக்கும் என்று... அது என்ன, துணிக்-குள்ளே! காலணியா?
ஆமாம். பாஞ்சாலி-யுடையது. சத்தம் வேண்டாமென்று வாங்கிக் கொண்டேன்.
கண்ணன் தன் காலணியைச் சுமந்து நிற்பதைக் கண்டு திரௌபதி பதறிப் பாய்ந்தாள்.
என்ன அண்ணு இது! என் காலணியை நீங்கள் சுமப்பதாவது? அபசாரம்!
தங்கையின் செருப்பை அண்ணன் தூக்குவது ஒன்றும் தவறல்ல. பேசாதிரு. உன் கோரிக்கையைப் பெரியவரிடம் சொன்னாயா?
பீஷ்மர் குறுக்கிட்டு—
மாயவனே! அவள் ஏதும் சொல்லவில்லை. ஆனால் நான் என்ன சொல்ல வேண்டும் என்று நீ முடிவு செய்தாயோ, அந்த ஆசீர்-வாதத்தை அவளுக்குச் செய்துவிட்டேன். 'தீர்க்க சுமங்கலி பவ' என்று வாழ்த்திவிட்-டேன்.
உங்கள் வாயால் வாழ்த்துவது பெரிய விசேஷமல்லவா? பாண்-டவர்கள் கடைசிவரைக்கும் பிழைத்திருப்பார்களே!
கண்ணு! நீ பொல்லாதவன்! உன்னை அபயம் என்று அடைந்தவர்களைக் காக்க அவர்களது பாதுகையைக் கூட நீ தாங்கிக்கொண்டிருப்பாய்!
தாத்தா! உங்கள் வாக்குறுதியைக் கேட்டு, நாங்கள் கலங்கிப் போனோம்!
உம்... பாண்டவர்களுக்கு உன் அண்ணன் கண்ணனின் அருள் இருக்கும்போது, இந்த பீஷ்மனால் என்ன செய்துவிட முடியும்?
பிதாமகரே! வந்த வேலை நல்லபடியாக முடிந்து விட்டது. எங்களுக்கு விடை கொடுங்கள்!
அவர்கள் வெளிப்-டிச் செல்வதைக் பார்த்தபடி...
பரந்தாமா! பக்தவத்சலா! பக்தர்களைக் காப்பதற்காகவே காலணியும் சுமக்கிற உன் கருணைதான் என்னே!
CC-O. In Public Domain. Digitized by eGangotri
Sri Vijayabharathi Book Centre, Srirangam
30

ராமசகாயமும் ராஜசகாயமும்

கருத்து: லால்குடி ரங்கராஜன்
கதை: பரமஹம்சதாஸ்
படம்: சங்கர்...

கண்ணபுரி ராஜ்யத்தை ஒரு காலத்தில் ஆண்ட மன்னன் சுந்தரவதனனிடம் பீர் ஒரு குறை. அவனுக்குத் தெய்வ நம்பிக்கைக் கிடையாது.

ஒரு நாள் இரவு அமைச்சருடன் சுந்தரவதனன் மாறுவேடம் அணிந்து நகர்சோதனை வந்து-கொண்டிருந்தான். அப்போது இரண்டு பிச்சை-க்காரர்கள் ஒரு தெருவில் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் பிச்சை கேட்ட முறையைப் பார்த்து அரசன் வியந்தான்.

மறுநாள் அவர்களை அரசசபைக்கு அமைச்சர் வரவழைத்து அரசரின் முன்னிலையில் விசாரித்தார்.

அமைச்சர் இரண்டாவது பிச்சைக்காரனை விசாரித்தார்.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

அன்று இரவு விருந்துக்குப்பின் அரசர் இளைப்பாறிக் கொண்டிருந்தபோது...

அமைச்சரே! அந்த 'ராஜசகாயம்' என்ற பிச்சைக்காரன் மகாபுத்திசாலி!

'ராஜசகாயமா? ராமசகாயமா?' எது மேலானது என்பதை ஆராய்ந்து விடுவோம்.

அரசே! என்னதான் மனிதர்கள் உதவி செய்தாலும் கடவுள் அருளிலீலாவிட்டால் அந்த உதவி அவனுக்குக் கிடைக்காது என்றே நான் நினைக்கிறேன்.

மறு நாள் அரசக்கட்டளையின்படி தண்டோரா போடப்பட்டது.

வருகிற ராமநவமி தினத்தில் எல்லோருக்கும் அரசர் அரண்மனையிலே தானம் தருகிறார்... எல்லோரும் வந்து வாங்கிக்குங்க.

ராமநவமி தினம். தானம் பெற வந்தவர்கள் நீண்ட வரிசையில் நின்று ஒவ்வொருவராக அரசரிடம் வந்து தானம் வாங்கிச் சென்றனர்.

ஒரு புது வேட்டியாம், ஒரு பூசணிக்காயாம்.

தானம் பெற வந்தவர்களின் வரிசையில் ராமசகாயம், ராஜசகாயம் ஆகிய இரண்டு பிச்சைக்காரர்களும் இருந்தனர். ராஜசகாயம் அரசரை நெருங்கித் தானம் வாங்கும்போது-

ஓ! நீ தானே நான் சந்தித்த ராஜசகாயம்?

ஆம், அரசே.

அரசர் அமைச்சரை வரவழைத்துப் புன்னகையுடன் அவர் காதில் ஏதோ சொன்னார். சற்று நேரத்தில் அமைச்சர் உள்ளேயிருந்து ஒரு பூசணிக்காயை எடுத்து வந்து அரசரிடம் தர. அரசர் அதை ராஜசகாயத்தின் கையில் கொடுத்தார்.

இதை வைத்துக்கொண்டு நல்லபடியாகப் பிழைப்பை நடத்து.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

கொஞ்ச நாள் கழிந்தது. அரசரும் அமைச்சரும் வழக்கம்-போல் மாறு வேடத்தில் நகர்சோதனைக்குச் சென்றனர். ஒரு வீட்டின் முன்னால் ராஜசகாயம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து அரசர் திடுக்கிட்டார்.

அம்மா! தாயே! சாப்பிட்டு இரண்டு நாளாச்சு!

மறு நாள் ராஜசகாயத்தை அரண்மனைக்கு வரவழைத்து அரசர் தனிமையில் விசாரித்தார்.

ராஜசகாயம், இன்னும் உன் தரித்திரம் உன்னை விடவில்லையா? உனக்குப் பூசணிக்காய்கூடத் தானம் செய்தேனே!

அரசே! அந்தப் பூசணிக்காயைச் சந்தையில் விற்றுவிட்டீடன். ஒரு சிறிய வெள்ளிக்காசுக்கு விலை போயிற்று. அந்த ஏற்றைக் காசினால் நான் எப்படிப் பணக்காரனாகிவிட முடியும்?

முட்டாளே, அரசர் உனக்கென்று தனியாகத் தந்த அந்தப் பூசணிக்காய் சாதாரணப் பூசணிக்காய் அல்ல. அதற்குள் முத்து, வைரம், தங்க நகைகள் ஆகியவற்றை அரசர் உனக்காகப் போட்டு வைத்திருந்தார். உன் மூன்று தலைமுறைக்குப் போதுமான செல்வம் அதில் இருந்தது.

மற்றொரு நாள் அரசரும் அமைச்சரும் நகர்-சோதனைக்குச் சென்றபோது, ஒரு பல்லக்கு அந்தப் பக்கம் வந்தது.

அரசே! அந்தப் பல்லக்கில் செல்வது யார் தெரியுமா? அவன்தான் ராமசகாயம்!

அப்படியா? நாளைக்கே அவனை அரண்-மனைக்கு அழைத்து விசாரிக்கலாம்.

மறு நாள் அரண்மனையில்...

கொஞ்ச நாள் முன்புவரை பிச்சை எடுத்துக்கொண்டிருந்த ராமசகாயம்தானே நீ? நீ எப்படிப் பணக்காரனாய்?

அமைச்சர் சொன்னது உண்மையாயிற்று. கடவுள் கிருபை இருந்தால்தான் ஒருவன் உயர்வு பெற முடியும்.

அரசே, எல்லாம் ராமபிரான் சகாயம்தான். என்னுடைய தந்தைக்குத் திதி கொடுக்க வேண்டியிருந்தது. எனக்குப் பணவசதி இல்லை. நானோ பிச்சைக்காரன். அன்றைய தினம் சில பிராம்மணர்களுக்குப் பூசணிக்-காய் மட்டும் தருவது என் வழக்கம். இந்தத் தடவை அதற்காகச் சந்தையில் ஒரு பூசணிக்காய் வாங்கினேன். வீட்டுக்குச் சென்று அதைக் கீறியபோது அதன் உள்ளே நகைகளும், பவுன்களும் வைரமுமாக இருந்தன. அந்த ராமசகாயத்தினால்தான் நான் பணக்காரனானேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

KATHIMALAR (TAMIL)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

RS. 4.00